www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# காலாண்டுத் தேர்வு - 2024

தேர்வு எண்

காலம் : 3-00 மணி **பத்தாம் வகுப்பு - தமிழ்** மதிப்பெண் : 100

## பகுதி - I (மதிப்பெண்கள் : 15) (15x1=15)

குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடைதருக. 2) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை ______
   அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
2. சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி என்னும் அடியில் பாக்கம் என்பது
   அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்
3. வட்டத்தொட்டி இச்சொல்லில் பயின்று வரும் தொகைநிலையைத் தேர்வு செய்க
   அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
   இ) வேற்றுமைத்தொகை ஈ) உம்மைத்தொகை
4. உனக்குப் பாட்டுகள் பாடுகின்றோம்
   உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்-பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்ற நயங்கள்யாவை?
   அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை
   இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை
5. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
   அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
6. உனதருளே பார்ப்பன் அடியேனே - யாரிடம் யார் கூறியது?
   அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
   இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்
7. 'இங்கு நகரப் பேருந்து நிற்குமா'? என்று வழிப்போக்கர் கேட்டது ______ வினா
   'அதோ, அங்கே நிற்கும்' என்று மற்றொருவர் கூறியது ______ விடை
   அ) ஐயவினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறை விடை
   இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழிவிடை
8. மொகு சாஸ்டு என்னும் ஜப்பானிய சொல்லின் பொருள்
   அ) மறுக்கிறோம் ஆ) விடைதரமுடியாது
   இ) விடைதர அவகாசம் வேண்டும் ஈ) இவற்றில் எதுவுமில்லை
9. கேட்டபாடல் என்பது
   அ) வினையெச்சத் தொடர் ஆ) வினைமுற்றுத்தொடர்
   இ) பெயரெச்சத் தொடர் ஈ) எழுவாய்த் தொடர்
10. பழமைக்கு எதிரானது, எழுதுகோலில் பயன்படும் இப்புதிருக்கான விடையைத் தேர்வு செய்க
    அ) புதுமை ஆ) இளமை இ) பெருமை ஈ) வறுமை
11. மனச்சாட்சி உறங்கும் போது மனக்குரங்கு ஊர் சுற்ற கிளம்பி விடுகிறது என்னும் கலைஞரின் வசனம் இடம் பெற்றுள்ள திரைப்படம் எது?
    அ) ராஜாராணி ஆ) பராசக்தி இ) அபிமன்யு ஈ) பூம்புகார்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடையளி.**

*"செந்தீச்சுடரிய ஊழியும் பனியொடு*
*தண்பெயல் தலைஇய ஊழியும் அவையிற்று*
*உள்முறை வெள்ளம் மூழ்கிஆர்தருபு*
*மீண்டும் பீடு உயர்பு ஈண்டி"*

12. இப்பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள நூல் ______
    அ) மலைபடுகடாம் ஆ) சிலப்பதிகாரம் இ) முல்லைப்பாட்டு ஈ) பரிபாடல்
13. இப்பாடலின் ஆசிரியர் யார்?
    அ) கீரந்தையார் ஆ) நப்பூதனார் இ) பெருங்கௌசிகனார் ஈ) கம்பர்
14. செந்தீ - பிரித்து எதுமுக
    அ) செந் + தீ ஆ) செம் + தீ இ) சென் + தீ ஈ) செம்மை + தீ
15. பெயல் என்ற சொல்லின் பொருள் யாது?
    அ) மழை ஆ) மலை இ) மளை ஈ) மாலை

## பகுதி - II (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1

குறிப்பு: நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். (கட்டாய வினா 21) (4x2=8)

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
    அ) மொழிப்பெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிட்டுள்ளார்.
    ஆ) செயற்கை நுண்ணறிவு பொதிந்த இயந்திரங்களுக்கு ஓய்வு தேவையில்லை.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

17. மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே! - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
18. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
19. செய்குத்தம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக?
*20. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருள்களைத் திருத்தி எழுதுக.*
அ) உழவர்கள் மலையில் உழுதனர்
ஆ) முல்லைப்பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்
21. வினை என முடியும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

***குறிப்பு: எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.*** ***(5x2=10)***

22. அமர்ந்தான் பகுபத உறுப்பிலக்கணம் தருக?
23. காட்டு விலங்குகளைச் _______ தடைசெய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் _______ திருத்த உதவுகிறது. (சுட்டல், சுடுதல்)
24. கீழ்க்காணும் தொடர்களில் அமைந்துள்ள வழுவமைதியின் வகைகளை எழுதுக.
அ) அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார்
ஆ) 'என் அம்மைவந்தாள்' என்று மாட்டைப் பார்த்துக் கூறுவது.
25. வேங்கை என்பதைத் தொடர்மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக்காட்டுக.
*26. இருசொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்கவும்.*
அ) கொடு-கோடு ஆ) இயற்கை - செயற்கை
*27. கலைச்சொற்கள் தருக.*
அ) Modern literature ஆ) Conversation
28. அன்பின் ஐந்திணைகள் யாவை?

**பகுதி - III (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1**

***குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு சுருக்கமாக விடையளிக்க.*** ***(2x3=6)***

29. சோலைக்காற்றும், மின்விசிறிக்காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.
30. தமிழ்மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்து கொண்ட இரண்டினை எழுதுக.
*31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.*

முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். விருந்தேபுதுமை என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்போர் நல்லோர். அத்தகையோரால் உலகம் நிலைத்திருக்கிறது.

அ) விருந்து குறித்து தொல்காப்பியம் குறிப்பிடுவது யாது?
ஆ) தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை யாது?
இ) இவ்வுரைப் பத்திக்குப் பொருத்தமான தலைப்பு தருக.

**பிரிவு - 2**

***குறிப்பு: இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும். (கட்டாய வினா 34)*** ***(2x3=6)***

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாய் பாவலரேறு சுட்டுவன யாவை?
33. 'மாளாத காதல் நோயாளன் போல்' என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.
*34. அடிபிறழாமல் எழுதுக.*
அ) 'சிறுதாம்பு தொடுத்த' ...... எனத் தொடங்கும் முல்லைப்பாட்டுப் பாடலை எழுதுக. ***(அல்லது)***
ஆ) 'செம்பொனடிச்சிறு' - எனத் தொடங்கும் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்ப் பாடலை எழுதுக.

**பிரிவு - 3**

***குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.*** ***(2x3=6)***

35. வினா எத்தனை வகைப்படும் அவை யாவை?
36. அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரளவிடல் *-இக்குறளினை அலகிட்டு வாய்பாடு தருக.*



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

37. தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

***குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.*** ***(5x5=25)***

38. அ) இறைவன் புலவர் இடைக்காடனாரின் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை விளக்குக.

***(அல்லது)***


ஆ) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்த கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

39. அ) மாநில அளவில் நடைபெற்ற மரம் இயற்கையின் வரம் எனும் தலைப்பிலான போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசுபெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

***(அல்லது)***

ஆ) புதிதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் தங்கைக்கு திறன்பேசிப் பயன்பாடு குறித்து அறிவுரைகளைக் கூறி கடிதம் ஒன்று எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. ஆதினி தன் தந்தை குமார் அவர்களிடம் நூலகத்தில் உறுப்பினராக வேண்டினாள். அவரும் ஆதினியிடம் 1000ரூபாயும், 14 பாரி நகர் தஞ்சாவூர் மாவட்டம் என்ற முகவரியிட்ட அடையாளச் சான்றையும் கொடுத்தார். கிளை நூலகத்திற்குச் சென்று ஆதினியாக தேர்வர் தன்னைக் கருதிக் கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42. ஆ) பள்ளியிலும், வீட்டிலும் உன் நற்செயல்கள் ஐந்தினை எழுதுக.

***(அல்லது)***



www.Padasalai.Net
Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

***ஆ) மொழிபெயர்க்க.***

1) If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart - ***Nelson Mandela***

2) Language is the road map of a culture, it tells you where its people come from and where they are going - ***Rita Mae Brown***

**பகுதி - V (மதிப்பெண்கள் : 24)**

***குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.*** ***(3x8=24)***

43. அ) விருந்தினர் பேணுதலும், பசித்தவருக்கு உணவிடுதலும் தமிழரின் பண்பாடாகும். இன்றைய சூழலில் உங்கள் இல்லத்திற்கு வந்த உறவினருக்கு விருந்தோம்பல் செய்த நிகழ்வையும் பசித்து வந்த ஒருவருக்கு நீங்கள் உணவிட்ட செயலையும் எழுதுக.

***(அல்லது)***

ஆ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துக்களை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

44. அ) கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே என்கிறது வெற்றிவேற்கை . மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றி உங்களின் கருத்துக்களை விவரிக்க. ***(அல்லது)***

ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப் பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

45. அ) ***குறிப்புகளைப் கொண்டு கட்டுரை ஒன்று வரைக.***
முன்னுரை - கல்பனாசாவ்லாவின் பிறப்பும், இளமையும் - விண்வெளிக்கல்வி - விண்வெளிப்பயணம் - பேரும் புகழும் பெறுதல் - முடிவுரை. ***(அல்லது)***

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத் திருவிழாவிற்குச் சென்றுவந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.

---

வினா எண் 41

**நூலக உறுப்பினர் படிவம்**

---------- மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்புற நூலகம் / __________

**<u>உறுப்பினர் சேர்க்கை அட்டை</u>**

அட்டை எண்: உறுப்பினர் எண் :

1. பெயர் :
2. தந்தை பெயர் :
3. பிறந்த தேதி :
4. வயது :
5. படிப்பு :
6. தொலைபேசி/அலைபேசி எண் :
7. முகவரி :
(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) :

நான் __________ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. __________ சந்தா தொகை ரூ. __________ ஆக மொத்தம் ரூ. __________ செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்கு கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :
நாள் : தங்கள் உண்மையுள்ள,

திரு /திருமதி / செல்வி / செல்வன் .................................................... அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

அலுவலக முத்திரை

பிணையாளர் கையொப்பம்
(பதவி மற்றும் அலுவலகம்)
(மாநில/மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள் பேராசிரியர்கள், உயர்/மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் சட்டமன்ற /நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி /மாநகராட்சி / ஒன்றிய பேரூராட்சி உறுப்பினர்கள்



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com